24.06.2025

O.S.No. 46/2024

PW1– ஆறுமுகபாண்டி– த/பெ. பிச்சுமணி நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.06.2025

முதல் விசாரணை தொடர்ச்சி

10.12.2022 தேதியிட்ட தபசில் சொத்துக்கான புலவரைபடம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் மதுரையில் கடந்த 2011ம் ஆண்டுமுதல் காய்கறி வியாபாரம் செய்துவருகிறேன்.

2. வா.சா.ஆ.7 கொடி வழியில் குறிப்பிட்டுள்ள எனது தாத்தா கருவேல் நாடாரின் ஒரே மகன் என் தந்தை என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்து சம்பந்தமான வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. வழக்கு சொத்து எனது தாத்தா கருவேல் நாடாருக்கு 22.03.1948 கிரையத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரிவின்றி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 17 செண்ட், அதில் 1 பாகம் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது.

6. எனது பிராதில் 1970 ல் எனது தாத்தா கருவேல்நாடார், சின்ன தாத்தா அண்ணாமலை நாடார் மற்றும் மரிய பொன்னம்மாள் ஆகிய மூவரும் வாய்மொழியாக பிரிவினை செய்துகொண்டார்கள் என நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

7. வழக்கு சொத்து சம்பந்தமான பாகப்பிரிவினை ஆவணம் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். அதில் தபசில் சொத்தின் விஸ்தீரணம் 28 செண்ட் என்று பக்கம் எண்.6 ல் சொத்து எண்.4 ல் குறிப்பிட்டுள்ளது.

8. எனக்கு அண்ணன் ராஜ் என்று ஒருவர் உள்ளார். வா.சா.ஆ.7 ஆவணத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ.2 எனக்கும், எனது தம்பி பொன்னுத்துரைக்கும் இடையே உள்ள ஆவணம் என்றால் சரிதான்.

9. பிராது மற்றும் முதல்விசாரணை வாக்குமூலம் என்னால் சொல்லப்பட்டு, என்னால் படித்துப்பார்க்கப்பட்டு சரியென்று தெரிந்து கொண்டே அதில் கையொப்பம் செய்தேன்.

10. என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் என்னுடைய சொத்து என விளம்புகை வேண்டி தாக்கல் செய்துள்ளேன்.

11. தாவா சொத்தானது மேற்குதொடர்ச்சிமலையின் மிக அருகாமையில் உள்ளது என்றால் சரிதான்.

12. தாவா சொத்தில் நான் தேக்குமரம், புளியமரம் நட்டு பராமரித்து, மரங்களை வெட்டி அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தும்போது வில்லங்க சான்றை பார்த்தேன்.

14. தாவா சொத்து சம்பந்தப்பட்ட வருவாய் ரசீதுகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா நிலமானது காடு என்பதால் அது மானாவரி விளைச்சல் மட்டுமே ஏற்படும், மழையின் அடிப்படையிலேயே அங்கு விளை பொருட்கள் கிடைக்கும்.

15. வழக்கு சொத்து சம்பந்தமான பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

16. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில், பட்டா எதுவும் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

17. எனது வாதுரையில் கடையம் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் மாரியப்பன் மற்றும் நான் விசாரணைக்கு ஆஜரானோம். விசாரணையில் இது உரிமையியல் பிரச்சனை அதனால் நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுங்கள் என எனது புகார் திருப்பப்பட்டது.

18. பிரதிவாதிகளுக்கு, அவர்கள் முன்கிரையதாரர்கள் 6 பேரிடமிருந்து கிரைய ஆவணம் கிடைத்து, அவர்கள் அனுபவத்தில் இருப்பதை நான் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை, வில்லங்கசான்றிதழை பார்த்திருந்தால் பிரதிவாதிகளின் முன்கிரையதாரர்களை தரப்பினர்களாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

19. பிரதிவாதிகளின் முன்கிரையதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் எனது வழக்கு அவசியதரப்பினரை சேர்க்காத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

20. வா.சா.ஆ.1 மூலம் எனது தாத்தாவுக்கு கிடைக்கப்பெற்ற அளவு வாரிசு அடிப்படையில் எனது தந்தைக்கு கிடைக்கப்பெற்று, பின்பு எனக்கு வா.சா.ஆ.2 முதல் கிடைக்க பெற்ற அளவும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல.

21. எனது வாதுரையின்படி எனது தந்தைக்கு 57 செண்ட கிடைக்கபெற்றது, எனது தந்தை இடம் எனக்கு கிடைத்திருந்தால் அதே அளவு தான் வந்திருக்க வேண்டும், ஆனால் வழக்கில் 28 செண்ட் கோருவதால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

22. பிரதிவாதியின் ஆவணங்கள் 1945 முதல் சரியான உரிமையாளர்கள் மூலம் கிரையம் பெற்று அதன் அடிப்படையில் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

23. 2ம் பிரதிவாதி கோரியுள்ள எதிரிடை கோரிக்கை சரியான ஆவணங்களுடன் தாக்கல் செய்துள்ளதால் அவர் கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

24. வழக்கு சொத்தில் எனது வாதுரை கூற்றின்படி அனுபவம் எனது கைவசம் உள்ளது என்றால், அங்கிருந்த தேக்குமரங்களை வெட்டும்போது வனத்துறையிடம் அங்கீகாரம் பெற்று, அந்த அங்கீகாரத்தை இந்த வழக்குடன் தாக்கல் செய்திருப்பேன், அதை நான் தாக்கல் செய்யாததால் நான் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

25. பாகப்பிரிவினை செய்த காலமான 2011 முதல் இந்நாள்வரை எங்களிடம் அனுபவம் இலலாததால்தான் வருவாய்துறையிடம் இருந்து பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ.2 ஆவணத்தில் வா.சா.ஆ1 ஆவணத்தின் கிரைய எண்ணை முன்ஆவணமாக குறிப்பிடாததால் நான் கோரும் வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

27. நான் இந்த வழக்கில் கோரும் பரிகாரத்திற்கான தக்க வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யாததால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

28. நான் கோரும் பரிகாரத்தில் பிரதிவாதியின் ஆவணங்களை ரத்து செய்யும்பரிகாரம் கேட்காமல், நான் கோரும் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.